දුරකථන ) 0112669192 , 0112675011
தொலைபேசி ) 0112698507 , 0112694033
Telephone ) 0112675449 , 0112675280

ෆැක්ස් ) 0112693866
பெக்ஸ் ) 0112693869
Fax )0112692913

විද්‍යුත් තැපෑල )postmaster@health.gov.lk
மின்னஞ்சல் முகவரி )
e-mail )

වෙබ් අඩවිය ) www.health.gov.lk
இணையத்தளம் )


සුවසිරිපාය
சுவசிரிபாய
**SUWASIRIPAYA**
සෞඛ්‍ය අමාත්‍යාංශය
சுகாதாரம அமைச்சு
**Ministry of Health**

මගේ අංකය )
எனது இல )
My No. ) CF/EXA/09/2021

ඔබේ අංකය )
உமது இல )
Your No. : )

දිනය )
திகதி )2021/11/29
Date )

பொது சுற்றுநிருப கடித இலக்கம் : 02-114/2021

மாகாண சுகாதார செயலாளர்கள்,

பிரதிப் பணிப்பாளர் நாயகம் - இலங்கைத் தேசிய வைத்தியசாலை

மாகாண சுகாதார சேவைப் பணிப்பாளர்கள்,

மத்திய அரசின் கீழ் நிர்வகிக்கப்படும் சகல வைத்தியசாலைகளின் பணிப்பாளர்கள்,

மற்றும் நிறுவனங்களின் தலைவர்கள் அனைவருக்கும்,

பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர்கள்.

பன்முகப்படுத்தப்பட்ட பிரிவுகளின் தலைவர்கள்.

**சுகாதார அமைச்சில் துணை மருத்துவ சேவையில் (MT-04-2016) மின்சார மூளை இயக்கப் பதிவாளர் வகுப்பு தரம் II உத்தியோகத்தர்களின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2021**

துணை மருத்துவ சேவையில் இதயத்துடிப்புப் பதிவாளர் தரம் II இற்கு இணைக்கப்பட்டு 03 வருடங்கள் நிறைவடைவதற்கு முன்னர் சித்தியடைய வேண்டிய முதலாவது வினைத்திறமை காண் தடைப் பரீட்சை சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மும் மொழிகளிலும் நடாத்தப்படும் என்பது இத்தால் அறியத்தரப்படுகின்றது. பரீட்சை நடைபெறும் திகதி, இடம், நேரம் என்பன பரீட்சை அனுமதி அட்டையில் குறிப்பிட்டு அனுப்பி வைக்கப்படும். **(விடயம் தொடர்பான வினாத்தாள் ஆங்கில மொழி மூலம் மாத்திரமே வழங்கப்படும்)**

02. **தகைமைகள்**

இப் பரீட்சைக்கு விண்ணப்பிக்கக்கூடியவரர்கள் மின்சார மூளை இயக்கப் பதிவாளர் II ற்கு பதவி உயர்வுபெற்றுள்ள உத்தியோகத்தர்கள் மட்டும்.,

**கவனிக்கவும்:- 2021.12.23 திகதியுடன் தரம் IIற்கு நியமிக்கப்பட்டு உரிய நியமனக்கடிதம் கிடைக்கப்பெற்றுள்ள உத்தியோகத்தர்களது விண்ணப்பங்களை மாத்திரம் எனக்கு அனுப்பி வைக்க நடவடிக்கை எடுக்கவும்.**

03. **விண்ணப்பங்கள் :-**

இச்சுற்றறிக்கையின் இறுதியிலுள்ள மாதிரிப்படிவத்திற்கமைய விண்ணப்பதாரியினால் தயாரிக்கப்படும் விண்ணப்பங்கள் நிறுவனத்தலைவரினூடாக பணிப்பாளர் (பரீட்சை), "சுவசிரிபாய", 385, வண.பத்தேகம விமலவங்ச தேரர் மாவத்தை, கொழும்பு - 10 எனும் முகவரியை 2021.12.23 ஆம் திகதியன்று அல்லது அதற்கு முன்னர் கிடைக்கூடியவாறு பதிவுத்தபாலில் அனுப்புதல் வேண்டும். ஒவ்வொரு விண்ணப்பத்திலும் தரப்பட்டுள்ள விபரங்கள் சரியானவை என பிரிவுத்தலைவரினால் சான்றுப்படுத்தப்பட வேண்டும். தங்களது விண்ணப்பப் பத்திரத்துடன் விண்ணப்பதாரியின் முகவரியிடப்பட்ட ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை ஒட்டப்பட்ட **"9x4"** அளவுடைய கடித உறைகள் மூன்றினையும் (இதில் விண்ணப்பதாரி தனது சொந்த முகவரியினையோ, அல்லது அலுவலக முகவரியினையோ குறிப்பிடலாம் ) **இணைத்து அனுப்பி வைக்க வேண்டும். விண்ணப்ப முடிவுத்திகதிக்குப் பின்னராக கிடைக்கும் விண்ணப்பங்கள் எதுவித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும். விண்ணப்பமானது A4** தாளின் இருபக்கங்களினையும் பயன்படுத்தி

தயாரிக்கப்படவேண்டும். முதலாவது பக்கத்தில் 01 - 04 வரையான விபரங்களும், இரண்டாவது பக்கத்தில் 05 - 09 வரையான விபரங்களும் உள்ளடக்கப்பட்டிருக்க வேண்டும்.

04. பரீட்சைக் கட்டணம்

I. முதன் முறையாக பரீட்சைக்கு விண்ணப்பிக்கும் விண்ணப்பதாரிகள் பரீட்சைக்கட்டணங்களிலிருந்து விடுவிக்கப்பட்டுள்ளனர். ஏனைய விண்ணப்பதாரிகள் ஒவ்வொரு விடயத்திற்கும் ரூபா.25 வீதம் இரத்துச் செய்யப்படாத முத்திரையினை ஒட்டி அதன் மீது தமது கையொப்பத்தினை இட்டு இரத்துச் செய்யப்பட்டிருத்தல் வேண்டும்.

II. எக் காரணத்தினைக் கொண்டும் இவ்வாறு செலுத்தப்பட்ட பரீட்சைக் கட்டணமானது வேறு பரீட்சைகளின் பொருட்டு மாற்றப்படுதலோ, அல்லது மீளப் பெறுதலோ மேற்கொள்ள இடமளிக்கப்படமாட்டாது.

05. பரீட்சையின் பொருட்டு உட்பத்திக் கொள்ளுதல்

I. ஏற்றுக்கொள்ளப்பட்ட விண்ணப்பங்களின் பொருட்டு விண்ணப்பதாரிகளுக்கு பரீட்சை அனுமதி அட்டைகள் அனுப்பிவைக்கப்படும். அப் பரீட்சை அனுமதிப் பத்திரத்தினை உரிய முறையில் பூரணப்படுத்தி பரீட்சை குழுவின் தலைவரிடம் கையளிக்க வேண்டும். அவ்வாறு மேற்கொள்ளப்படவில்லையாயின் பரீட்சைக்கு தோற்றுவதற்கு இடமளிக்கப்படமாட்டாது.

II. பரீட்சையின் பொருட்டு விண்ணப்பித்துள்ள விண்ணப்பதாரிகளின் பொருட்டு பரீட்சைக் குழுவின் தலைவருக்கு தங்களினது ஆள் அடையாளத்தினை உறுதிப்படுத்திக் கொள்ளுவதன் பொருட்டு கீழ் குறிப்பபிடப்பட்டுள்ள ஆவணங்களில் ஒன்றினை கொண்டு வருதல் வேண்டும்.

(அ) தேசிய அடையாள அட்டை

(ஆ) சகாதார அமைச்சினால் அதனோடு தெடர்புடைய நிறுவனத்தினால் வழங்கப்பட்டுள்ள அடையாள அட்டை

(இ) செல்லுபடியான சாரதி அனுமதிப்பத்திரம்

(ஈ) செல்லுபடியான கடவுச் சீட்டு

06. பரீட்சை நடைமுறை

இப் பரீட்சையானது திணைக்களப் பரீட்சை, வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை என்னும் இரண்டு பரிவுகளை கொண்டது. திணைக்களப் பரீட்சை எழுத்து, பிரயோகம்,வாய்மொழி என்னும் மூன்று பகுதிகளை கொண்டுள்ளதுடன் வினைத்திறமைகாண் தடைப் பரீட்சையானது தாபன விதிக்கோவை, நிதிப்பிரமாணங்கள் என்னும் இரண்டு வினாத்தாள்களை கொண்டுள்ளது. “ஒவ்வொரு வினாத்தாளுக்குமான நேரம் 02 மணித்தியாலங்கள்”. ஒவ்வொரு பிரிவிற்கும் 100 புள்ளிகளை வழங்கப்படும். சித்தியடைவதன் பொருட்டு 40 புள்ளிகளை பெற்றுக்கொள்ள வேண்டும். சித்தியடையாத விடயத்தை எதிர்வரும் தடவைகளில் பூரணப்படுத்தல் வேண்டும். முதல் தடவையாக பரீட்சைக்குத் தோற்றும் விண்ணப்பதாரிகள் அனைத்து விடயங்களுக்கும் விடையளிக்க வேண்டும்.

07. பரீட்சை பாடத்திட்டம்

07.1. திணைக்களப் பரீட்சை

07.1.1 விடயம் தொடர்பான வினாத்தாள

08 வினாக்களைக் கொண்ட வினாப்பத்திரத்தில் 05 வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். நேரம் 03 மணித்தியாளம். சித்தியடைவதன் பொருட்டு ஆகக் குறைந்தது 40 புள்ளிகளைப் பெற்றுக் கொள்ள வேண்டும். மொத்தப்புள்ளி 100 ஆகும்.

பாடத்திட்டம் :-

i. இடத்திற்குரிய காயங்களின் பொருட்டு குணப்படுத்தப்படுத்த முடியாத நோயாளர்களின் (உணர்விழுந்த நோயாளர்கள் , நாட்பட்ட நோயாளர்கள்) மின்சார மூளை இயக்கக் குறிப்புக்களை வைத்தல்.

ii. கட்புல புகைப்பட அறிக்கையுடன் நித்திரை தொடர்பான அவதானிப்புடனான மூளை இயக்க மின்சார பதிவுக் குறிப்பு வைத்தல் மற்றும் தரவுகள் களஞ்சியப்படுத்தல்

iii தீவிர சிகிச்சைப் பிரிவினால் மின்சார மூளை பதிவேடு மேற்கொள்ளல்

iv Visual Evoked Potential, Brain Stem Wvoked Response, Somatosensory Evoked Potential, Electroretinogram என பெயரிட்டு பரீட்சித்தலின்போது குறிப்பு இடல்.

v மின்சார மூளை இயக்கப் பதிவுகளை பொருள் கேட்டல்

vi மின்சார மூளை இயக்கங்களைப் பதிவு செய்யும் உபகரணங்களின் தரப்படுத்தலும் , நிகழ்ச்சித்திட்டங்களுக்கு உட்படுத்தலும்.

vii பிணியால் நிலைய நோய்கள் தொடர்பாக மின்சார மூளை இயக்கப் பதிவுviii நரம்பு தொகுதி குறைபாடு தொடர்பான மின்சார இயக்கப் பதிவு குறித்தல் அல்லது ஏனைய சிகிச்சைகளுக்கான விஞ்ஞான ரீதியான பரிசீலணை

7.2.1 **பிரயோகப் பரீட்சை**

விடயப் பரப்புடன் தொடர்புடைய இயலுமை மற்றும் செயற்பாடுகள் தொடர்பான பிரச்சினைகளின் போது வாய்மொழி மூல பரீட்சையாகும். நேரம் பரீட்சையினைப் பொருத்து தீர்மானிக்கப்படும். புள்ளிகள் 100

7.2.2 **வாய்மொழிப் பரீட்சை**

விடயப் பரப்புடன் தொடர்புடைய இயலுமை மற்றும் செயற்பாடுகள் தொடர்பான பிரயோகப் பரீட்சை. புள்ளிகள் 100

7.2 **வினைத்திறமைகாண் தடைப்பரீட்சை**

7.2.1 **தாபன விதிக்கோவை மற்றும் அலுவலக நடைமுறைகள் வினாத்தாள்**

இவ் வினாத்தாள் ஆனது தாபன விதிக்கோவையின் கீழ் வரும் அத்தியாயங்கள் மற்றும் அரசாங்க சேவை ஆணைக்குழுவின் ஒழுங்குவிதிகளின் படி அமைந்த கட்டுரை வடிவிலான 07 வினாக்களைக்கொண்ட வினாப்பத்திரத்தில் 04 வினாக்களுக்கு மட்டும் விடையளிக்கவும் நேரம் 02 மணித்தியாளம். மொத்தப்புள்ளி 100.

விடயப்பரப்பு

| | | |
|---|---|---|
| அத்தியாயம் | XV | கல்வி , பயிற்சி அல்லது கடமை நிமித்தம் வெளி நாட்டிற்குச் செல்லுதல் |
| அத்தியாயம் | XVI | விடுமுறைப் பயணம் (Holiday Travel ) |
| அத்தியாயம் | XXIII | விசேட வகையான நோய்கள் காரணமாக அல்லல்படும் அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான விசேட சலுகைகள் மற்றும் நிபந்நதனைகள். |
| அத்தியாயம் | XXIV | சம்பளக் கடன் / முற்பணங்கள் |
| அத்தியாயம் | XXV | தொழிற்சங்க உறுப்பினர்களுக்கான சலுகைகள் |
| அத்தியாயம் | XXVII | தொடர்பாடல் முறைகள் |
| அத்தியாயம் | XXVIII | நிர்வாக நடைமுறைகள் |
| அத்தியாயம் | XXX | அரசாங்க ஊழியர்கள் மீதான அரசாங்கத்தின் உரிமைகள் |
| அத்தியாயம் | XXXIII | சட்ட ஆலோசளைனகளும் , சட்ட நடவடிக்கைகளும் |
| அத்தியாயம் | XLVII | பொது நடத்தையும் , ஒழுக்கமும் |
| அத்தியாயம் | XLVIII | ஒழுக்காற்று நடைமுறை |

நிதிப்பிரமாணங்கள்

(இரண்டு மணித்தியாலங்களை கொண்ட கட்டுரை வினாத்தாள் ஏழு வினாக்களில் நான்கு வினாக்களக்கு மட்டும் விடையளிக்குக மொத்த புள்ளிகள் 100)

பாடப்பரப்பு

அத்தியாயம் VI - பொது நிதியினைப் பராமரித்தல் / பாதுகாத்தல் (Custody) முதலியன காசு கட்டு நிதி மற்றும் வங்கிக்கணக்குகள் / பொதுநிதியின் பிணை / முறி , பொருட்களை கணக்கெடுத்தல் (Board of Survey) வங்கிப்பற்று , வங்கிக் கணக்குகள் ( நிதிப்பிரமாணங்கள் 315 - 396 )

அத்தியாயம் XIII - வேலைகள் வழங்கப்படுதல்களுக்கும் மற்றும் சேவைகள் வழங்கல்களுக்கும் பொருட் கொள்வனவு முறைகள் , களஞ்சியம் , பொருட்களைச் சரிபார்த்தல் , களஞ்சியப்படுத்தும் முறை , ஒப்பந்தங்கள் , பொருட்கொள்வனவு நடைமுறைகளில் இருந்து பிறழ்தல் ( நிதிப்பிரமாணங்கள் 708 - 775 )

08. **பரீட்சை தொடர்பான ஒழுங்குவிதிகளைக் கடைப்பிடித்தல்.**

பரீட்சார்த்திகள் குறிப்புக்களை தன்னிடத்தில் வைத்து பார்த்து எழுதுதல் தடைசெய்யப்பட்டுள்ளது. ஏனைய பரீட்சார்த்திகளின் விடைத்தாளினை பார்த்து எழுதுதலும் தடை செய்யப்பட்டுள்ளது. ஒருவருக்கொருவர் உதவி செய்தலை தவிர்த்துக்கொள்ளல் வேண்டும். மேலும் கையடக்கத் தொலைபேசி மற்றும் அதனுடன் தொடர்புடைய தொடர்பாடல் ,இலத்திரணியல் உபகரணங்களை பயன்படுத்தாதிருத்தல் வேண்டும். இவ்விதிகளை மீறும் எந்தவொரு பரீட்சார்த்திமீதும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**09** 09. தயவு செய்து இச்சுற்று நிருபத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்களை உங்களது பிரிவில் / விஷேட இயக்கத்தில் / நிறுவனத்தில் கடமையாற்றும் அனைத்து சுகாதார, போஷணை மற்றும் சுதேச வைத்திய அமை அமைச்சின் துணை மருத்துவ சேவையினது மூளை இயக்கப் பதிவாளர் வகுப்பு தரம் II உத்தியோகத்தர்களுக்கு அறிவிப்பதற்கான ஒழுங்கினை மேற்கொள்ளவும். இந்த விபரங்களை www.health.gov.lk என்னும் இணையத் தளத்திலும் பெற்றுக்கொள்ளலாம்.

**கவனிக்கவும் :- தமிழ், ஆங்கில சுற்று நிருபங்களில் ஏதாவது ஒவ்வாமை காணப்படுமிடத்து சிங்கள மொழயிலான சுற்று நிருபமே வலுவுடையதாகும்.**

சாமிக எச் கமகே
பிரதிப் பணிப்பாளர் நாயகம் ( நிர்வாகம் ) II
செயலாளருக்காக,
சுகாதார அமைச்சு

Chamika H. Gamage
Deputy Director General (Admin)
Ministry of Health
"Suwasiripaya"
Colombo 10.

EXA

அலுவலகப் பிரயோகத்தின் பொருட்டு

மாதிரி விண்ணப்பப்படிவம்

சுகாதார அமைச்சில் துணை மருத்துவ சேவையில் **(MT-04-2016)** மின்சார மூளை இயக்கப் பதிவாளர் வகுப்பு தரம் **II** உத்தியோகத்தர்களின் பொருட்டான இரண்டாவது வினைத்திறமைகாண் தடைப் பரீட்சை 2021

01.(அ). (i). விண்ணப்பதாரரின் முழுப் பெயர் (தமிழில் முதலெழுத்துக்களை இறுதியில் இட்டுஎழுதவும்)

............................................................................................................................

(ii) விண்ணப்பதாரரின் முழுப் பெயர் (ஆங்கில கபிடல் எழுத்தில் )

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(iii) முதலெழுத்துக்களினால் குறிப்பிடப்படும் பெயர் (தமிழில்)

............................................................................................................................

(iv) முதலெழுத்தக்களினால் குறிப்பிடப்படும் பெயர்கள்( ஆங்கில கபிடல் எழுத்தில்)

| | | | | | | | | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | | | | | | | | | | | | | | |

(ஆ) (i). தரம் II ற்கு பதவி உயர்த்தப்பட்ட அல்லது உள்ளீர்ப்பு செய்யப்பட்ட கடிதஇலக்கமும்திகதியும்..

(ii). தற்பொழுது பெறும் வருடாந்த வேதனம்.......................................................................

(iii) கையடக்கத் தொலைபேசி இலக்கம் [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(iv) தேசிய அடையாள அட்டை [ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ][ ]

(v) மன்னஞ்சல் முகவரி ............................................................

02 தாங்கள் இம்முறை விண்ணப்பிக்கும் விடயத்தின் முன்னே (√ ) என்றும், விண்ணப்பிக்காத விடயத்திற்கு முன்னே (X) என்றும் அடையாளமிடுக.

விடயம் தொடர்பானது [ ]

தாபன வித்க்கோவை [ ]

நிதிப்பிரமாணம் [ ]

பிரயோகப் பரீட்சை [ ]

வாய்மொழிப் பரீட்சை [ ]

03. (அ) தற்பொழுது சேவையாற்றும் சேவை நிலையம் :

(ஆங்கிலத்தில்) ............................................................................................

(தமிழில்) ..................................................................................................

(ஆ) இந்நிறுவனம் நிர்வகிக்கப்படுவது - மத்திய அரசினால் [ ]

- மாகாண சபையினால் [ ]

(இ) சேவை நிலையம் நிர்வகிக்கப்படுவது மத்திய அரசின் கீழா? மாகாண சபையின் கீழா? .......
மாகாண சபையின் கீழாயின் உரிய மாகாணம் ..............................................................
அதற்குரிய மாவட்டம் : ...............................................................................................

(ஈ) பரீட்சை அனுமதி அட்டை அனுப்புவதன் பொருட்டு தெளிவாக விண்ணப்பதாரியினது முகவரியிடப்பட்ட 9”x4” அளவு ரூபா.45 பெறுமதியுடைய முத்திரை இடப்பட்ட கடித உறை மூன்று இணைக்கப்பட்டு உள்ளதா?..........................................................................

(i) தபால் முகவரி (சிங்களத்தில்) : .......................................................................

(ii) தபால் முகவரி (ஆங்கில கப்பிற்றல் எழுத்துக்களில்) : ........................................

04. பரீட்சைக்கு தோற்றவுள்ள மொழி (சிங்களம் / தமிழ் / ஆங்கிலம்): ........................................

05. (அ). இதற்கு முன் இப்பரீட்சைக்குத் தோற்றி உள்ளீர்களா? ..........................................................................

(ஆ). அவ்வாறு தோற்றி இருப்பின் இம்முறையின் பொருட்டு முத்திரைகள் ஒட்டியுள்ளதா? ..........

| முத்திரைக் கூண்டு |
|---|

06. **விண்ணப்பதாரரின் சான்றிதழ்**

எனது அறிவு மற்றும் விசுவாசத்தின்படி

(1). இவ்விண்ணப்பத்தில் என்னால் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் யாவும் உண்மையானவைகளெனவும், இப்பரீட்சைக்கு நான் தோற்றுவது முதன்முறையானபடியால் பரீட்சைக் கட்டணம் செலுத்த வேண்டிய அவசியமில்லை எனவும்/முதன் முறை அல்லாதபடியால் ரூபா ............ பெறுமதியான முத்திரைகள் ஒட்டப்பட்டுள்ளதெனவும், இவ்விண்ணப்பத்தில் என்னால் ஒட்டப்பட்டுள்ள முத்திரைகள் மதிப்பு நீக்கம் புரியப்படுவதற்கு முன்பு வலுவிலுள்ள பாவிக்கப்படாத முத்திரைகள் எனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

(11). சுகாதாரத் திணைக்களத்தினால் பரீட்சை தொடர்பாக விதிக்கப்பட்டுள்ள சட்டதிட்டங்களுக்கு உடந்தையாக நடப்பேன் எனவும், இப்பரீட்சை தொடர்பான நியதிச்சட்டத்தின் படி நான் தகைமையற்றவன் எனக் காணப்படின் எனது பரீட்சார்த்தித் தன்மையை இரத்து செய்வதற்கு மேற்கொள்ளும் எதுவிதத் தீர்மானத்திற்கும் நான் உடன்படுவேன் எனவும் உறுதிப்படுத்துகின்றேன்.

..................... ..........................................

திகதி விண்ணப்பதாரரின் கையொப்பம்

07 **சுயவிபரக் கோவையினை கையாளும் விடய முகாமைத்துவ உதவியாளரின் சான்றிதழ்**

இவ் விண்ணப்பமானது விண்ணப்ப முடிவுத்திகதிக்கு முன்னர் என்னிடம் பாரமளிக்கப்பட்டது என்றும், சுயவிபரக் கோவையில் உள்ள தகவல்களின் அடிப்படையில் சரியாக பூரணப்படுத்தப்பட்டுள்ளது என்றும், இவ்விண்ணப்பப் பத்திரத்தின் பிரதி ஒன்று சுயவிபரக் கோவையில் கோவையிடப்பட்டுள்ளது என்றும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

............................................. ..............................................

திகதி பெயர் கையொப்பமும், திகதியும்.

08. **நிறுவனத் தலைவரின் சான்றிதழ**

திருவாளர்/திருமதி/செல்வி/ ........................ என்பவர் .....................உத்தியோகத்தராக எனது நிறுவனத்தில் பணிபுரிகின்றார். என்றும் அவ் உத்தியோகத்தர் இப் பரீட்சைக்குத் தோற்றுவது முதன் முறையாக இல்லாத*படியால் ரூபா..........பெறுமதியான முத்திரைகள் இவ்விண்ணப்பத்தில் ஒட்டியுள்ளதாகவும்/முத்திரைகள் ஒட்ட அவசியமில்லை* எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள விபரங்கள் யாவும் இவருடைய சுயவிபரக் கோவைக்கு அமைவாக சரியானவை என்றும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு உரிய தகைமைகளினை இவர் பூர்த்தி செய்துள்ளார் என்றும் என் முன்னிலையில் தனது கையொப்பத்தினை இட்டார் என்றும் உறுதிப்படுத்துகின்றேன்.

திகதி: ................................ .......................................

திணைக்களத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்திரை இடப்பட வேண்டும்)

09 **பன்முகப்படுத்தப்பட்ட/விசேட இயக்கத் தலைவரின் சான்றிதழ்**

திருவாளர்/திருமதி/செல்வி .....................................................என்பவர் 11ஆம் வகுப்பின் 'ஆ' பிரிவின் இருதயத்துடிப்புப் பதிவாளர் எனது பிரிவில்/இயக்கத்தில் சேவையாற்றுகின்றார் எனவும், விண்ணப்பத்தில் கொடுக்கப்பட்டுள்ள தகவல்கள் விண்ணப்பதாரரின் பெயர்வழிக் கோவையிலுள்ள விபரங்களின் படி சரியானவைகளெனவும் இப்பரீட்சைக்குத் தோற்றுவதற்கு அவனுக்கு/அவளுக்குத் தகுதியுள்ளதெனவும் இத்தால் உறுதிப்படுத்துகின்றேன்.

பன்முகப்படுத்தப்பட்ட பகுதி/விசேட இயக்கத் தலைவரின் கையொப்பம்

(இறப்பர் முத்ததிரையிட வேண்டும்)

திகதி...............................